**அசல் வழக்கு எண் : 80/2014**

**நாள்: 04.09.2025**

**வாசா.1–ரங்கராஜீ, த/பெ.ரகுபதிநாயனார்**

வாதி மற்றும் வாதி வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதிகளின் வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் வா.சா.1–ன் குறுக்கு விசாரணை:**

1. நான் எந்த தேதியில் நிலம் வாங்கினேன் என்றால் 25.06.1992 அன்று நிலம் வாங்கினேன். நான் யாரிடம் இருந்து மேற்படி நிலத்தை வாங்கினேன் என்றால் பெருமாள் என்பவரிடம் இருந்து 75 சென்ட் நிலம் வாங்கினேன். மேற்படி 75 சென்ட் நிலமும் வெவ்வேறு புல எண்களை கொண்டது. புல எண்கள்.142/3B மற்றும் 144/1B ஆகும். நான் 1992–ஆம் ஆண்டில் பெற்ற கிரைய ஆவணத்தில் மேற்படி 2 புல எண்கள் தான் குறிப்பிடப்பட்டுள்ளன என்றாலும், வேறு புல எண்கள் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றாலும் சரிதான். 1992–ஆம் ஆண்டில் நான் பெற்ற கிரைய ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் ஒப்படைத்துள்ள ஆவணத்தில் மேற்குறிப்பிட்டுள்ள 2 சர்வே எண்களை தவிர வேறு எண்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறாகும் என்றால் 144/2B என்ற புல எண்ணில் நான் உட்பட 3 நபர்களுக்கான கிணறானது உள்ளது.

அது குறித்து மேற்படி கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

2. மேற்படி கிணறானது பெருமாளின் தந்தையான கோன்றிகான், பச்சைபூசாரி மற்றும் எனக்கு பாத்தியப்பட்டதாகும். பெருமாள் என்பவர் யார் என்றால் அவரிடம் இருந்து தான் நான் கிரையம் பெற்றேன். கிரையத்திற்கு பின்னிட்டு தான் எனக்கு மேற்படி கிணற்றில் பாத்தியம் ஏற்பட்டது. மேற்படி கிணற்றில் எனக்கு 5 சென்ட் பங்கு உள்ளது. தற்போது கிணறானது இல்லை. நான் கிரையம் பெற்ற சமயத்தில் குட்டை கிணறு அமைந்திருந்தது. சாட்சி தாமாக முன்வந்து மேற்படி கிணறானது சர்வே செய்யபடவில்லை என்று கூறுகிறார்.

3. நான் தாவா சொத்தை கிரையம் பெற்ற பெருமாள் என்பவரும், கோன்றிகான், பச்சைபூசாரி ஆகிய மூவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படி மூவருக்கும் இவ்வழக்கு சொத்தும் இதர சில சொத்துக்களும் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மூவரும் தங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து குறித்து அவர்களுக்குள் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏதேனும் ஏற்படுத்திகொண்டனரா என்றால் ஏற்படுத்திகொண்டனர். பெருமாள் என்பவருக்கு எந்த தேதியில் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் அதற்குரிய ஆவணத்தை பார்க்க வேண்டும். நான் தாவா சொத்தை பெருமாள் என்பவரிடமிருந்து கிரையம் பெறுவதற்கு முன்னதாக நான் மேற்படி ஆவணத்தை பார்க்கவில்லையா

என்றால் பார்த்தேன். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன். நான் மேற்படி பெருமாள் என்பவரிடமிருந்து UDR பட்டா அடிப்படையில் கிரையம் பெற்றேன்.

4. நான் பாகப்பிரிவினை பத்திரம் அல்லது UDR பட்டா இவற்றில் எதன் அடிப்படையில் கிரையம் பெற்றேன் என்றால் பாகப்பிரிவினை பத்திரம் அடிப்படையி'ல் கிரையம் பெற்றேன். UDR பட்டாவிற்கும் அதற்கும் வேறுபாடு உள்ளது. நான் தாவா சொத்தை பெருமாள் மற்றும் அவரின் மகன் புத்தர் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் (வா.சா.ஆ.1) நான் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் நான் கிரையம் பெற்ற ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆகும். மேற்படி கிரைய ஆவணத்தில் நிலமானது பெருமாள் என்பவருக்கும் அவரின் மகனுக்கும் UDR பட்டா மூலமாகவோ அல்லது பாகப்பிரிவினை மூலமாகவோ பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் UDR பட்டா மூலமாக பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் நான் கூறுவது போல பெருமாள் மற்றும் அவரின் மகனுக்கு பாகப்பிரிவினை மூலமாகவோ அல்லது UDR பட்டாவின் மூலமாகவோ பாத்தியப்பட்டது என குறிப்பிடபடவில்லை என்றாலும், வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

5. பெருமாள், கோன்றிகான் மற்றும் பச்சைபூசாரி ஆகியோரிடையில் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டு அதற்கான UDR பட்டா என் வசம் உள்ளது. மேற்படி UDR பட்டாவை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை. ஆகையால் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி மூவருக்கும் இடையில் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றாலும், அதனை அனுசரித்து பட்டா அவர்களின் பெயரில் வழுங்கபடவில்லை என்றாலும், நான் போலியாக ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

6. நான் தாவா சொத்தை கிரையம் பெறும்போது நான்குபுற எல்லைகளிலும் யார்யார் உள்ளனர் என்று நான் பார்க்கவில்லையா என்றால் நான்குபுற எல்லைகளிலும் உள்ளனர் என்றும் எனக்கு தெரியும். ஆகையால் பார்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

SARANYA M Digitally signed by SARANYA M Date: 2025.09.04 16:17:34 +0530